




# மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வேலைக்குத் திரும்ப தேவையான பயிற்சி வழங்கும் புதிய நிலையம்

1/10/2016 21:45

A A+

மனநோயால் பாதிக்கப்பட்டோருக்கு வேலை கிடைப்பதும், அதனைத் தக்கவைத்துக் கொள்வதும் சிரமம் என்ற கருத்தை மாற்ற விரும்புகிறது, புதிய பயிற்சி நிலையம்.

MINDSET Learning Hub எனும் அது, இன்று அதிகாரபூர்வமாகத் திறக்கப்பட்டது.

மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள், மீண்டும் வேலைக்குத் திரும்புவதற்குத் தேவையான உத்திகளைக் கற்றுத் தர முனைகிறது புதிய நிலையம்.

மனநோயால் பாதிக்கப்பட்டவர்கள் மீண்டும் வே...

உணவு, பானத் துறையில் பணிபுரிய விரும்பும் திருவாட்டி ஜூடி லிம்முக்கு மிதமான schizophrenia, மனஅழுத்தம், பதற்றம் ஆகிய பிரச்சினைகள் உண்டு.

வேலை கிடைப்பதில் சிரமம்; நோயை வெளிப்படையாகக் கூறலாமா வேண்டாமா என்று சிந்திப்பதுண்டு என்கிறார் அவர்.

இருந்தாலும் தம் விருப்பத்தைப் பூர்த்திசெய்ய புதிய நிலையத்தின் பயிற்சிகளுக்குச் செல்கிறார், அவர்.

பாதிக்கப்பட்டோருக்கு ஏற்ற வேகத்தில், வசதியான சூழலில் பயிற்சிகள் நடத்தப்படுகின்றன.

உபசரிப்பு, சுகாதாரப் பராமரிப்பு, உணவு-பானத் துறைகள் ஆகியவற்றைப் பிரதிபலிக்கும் வண்ணம் பயிற்சிகள் வழங்கப்படுவதாகப் பயிற்றுவிப்பாளர்கள் கூறினர்.

விரைவில், தன்னம்பிக்கை, தொடர்புத் திறன்கள், சுய பராமரிப்புத் திறன்கள் போன்றவற்றைக் கற்றுத்தரும் பயிலரங்குகளை நடத்த விரும்புகிறது நிலையம்.

பயிற்சிகள் இப்போதைக்கு இலவசம்.

பயிற்சி முடிந்ததும் பயிற்சி பெற்றோருக்கு வேலை தேடவும் உதவுகிறது, நிலையம்.

மனநோயால் பாதிக்கப்பட்டோர் மீண்டும் வேலைக்குத் திரும்புவதும் அந்தச் சூழலுக்கு ஏற்ப பழகிக்கொள்வதும் முக்கியம்.

ஆலோசனைகளும் புனர்வாழ்வுத் திட்டமும் இருந்தாலும் வேலை கிடைப்பதற்கும் சமூகத்துடன் ஒன்றிணைவதற்குமான ஆதரவு இன்னமும் குறைவு என்றது சிங்கப்பூர் மனநலச் சங்கம்.

## உங்கள் கருத்து

+

**0 கருத்துகள்** இதன்படி வரிசைப்படுத்து: **மிகப் பழமையானது**

கருத்தைச் சேர்க்கவும்...

Facebook Comments Plugin

## உங்கள் கருத்து

அமெரிக்க அதிபர் தேர்தல்: ஹிலரி-ட்ரம்ப் தொலைக்காட்சி விவாதம். யார் சிறப்பாக வாதிட்டார்?

- ஹிலரி:
- டிரம்ப்:

வாக்களிக்க

## தமிழ்ச் செய்தியில் மேலும்

- 'சூப்பர்மேன்' தோற்றத்தில் முகாபே - சிரிப்பாய்ச் சிரிக்கும் இணைய உலகம்
- தோ பாயோ வெஸ்ட் சமூக மன்றத்தில் புதிய இரத்த சுத்திகரிப்பு நிலையம்
- சிங்கப்பூரில் சம்பளங்கள் உயரலாம் - கருத்தாய்வு
- தம்பி ராமையாவின் மகனைக் கண்டு அசந்துபோன விஜய்
- இன்றைய சொல்: Credibility

Recommended by

## அதிகம் வாசிக்கப்பட்டவை

- செம்பவாங் வீட்டில் சிறுவன் பிணை
- 17 மணிநேரத்துக்குப் பிறகு பிணைபிடிக்கப்பட்ட சிறுவன் மீட்பு
- பேருந்துக்கு அடியில் சிக்கிக்கொண்ட பாதசாரி
- மாணவனிடம் தவறாக நடந்துகொண்ட ஆசிரியருக்குச் சிறை
- தாம் சிங்கப்பூரின் பிரதமராகும் சாத்தியமில்லை : துணைப் பிரதமர் தர்மன்




சிங்கப்பூர்

Mediacorp News Group © 2016